தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௩	மலர்
௪௬	பரிதாபி, ஐப்பசி	எ
	(1972 — அக்டோபர் — நவம்பர்)	

வியங்கோள் வினைமுற்று

டாக்டர் மோ. இசரயேல்,
தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக் கழகம்.

தமிழில் வழங்கும் வினை வகைகளுள் (modals) வியங்கோள் வினைமுற்று ஒன்றாகும். தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்தின் உயிர் மயங்கியலில் அகரவீற்றுச் சொற்களின் புணர்ச்சியைக் கூறுங்கால்,

ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும் (தொ எ. 210) இயல்பாகப் புணரும் என்கின்றார். அடுத்த நூற்பாவில்

வாழிய என்னுஞ் செயவென் கிளவி
இறுதி அகரம் கெடுதலும் உரித்தே (தொ. எ 211)

என்று கூறுகின்றமையால் 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் அகர இறுதி உடையது என அறிதும். தொல்காப்பியனார் வியங்கோளினையும் 'செய' என்னும் சொல்லினையும் அகர இறுதியுட் கூறியுள்ளாராயினும், வியங்கோள் ககர இறுதியுடையது; செயவென்கிளவி அகரவிறுதிடையது என்பார் உளர்.

சொல்லதிகாரத்தின் வினையியலில் அவர் இருதிணைப் பொது வினைகளைத் தொகுத்துச் சொல்லுங்கால்

முன்னிலை வியல்கோள் வினையெஞ்சு கிளவி
....
....
... .
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய (தொ. சொ. 222)

என்று வியங்கோளினையும் அதனுள் சேர்த்துச் கொள்ளுகின்றார். தொடர்ந்து அவர் முன்னிலையில் மட்டும் வழங்கும் முன்னிலை வினைகளை இரண்டு நூற்பாக்களில் கூறிப் பின்னர்

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே (தொ. சொ. 225)

என்னும் நூற்பாவில் எஞ்சிய விரவுவினைகள் ஐம்பால் மூவிடங்களினும் வழங்கும் என்று குறிப்பிடுகின்றார். அடுத்த நூற்பாவில் அவர்

அவற்றுள்,

முன்னிலை தன்மை ஆயி ரிடத்தொடும்
மன்னு தாகும் வியங்கோள் கிளவி (தொ. சொ. 226)

என்று கூறி வியங்கோட்கிளவி முன்னிலை தன்மை ஆகிய இரு இடங்களிலும் 'மன்னுதாகும்' என்கின்றார்.

எழுவாய் வேற்றுமை ஏற்கும் பயனிலைகளைப் பற்றிப் பேசும் ஆசிரியர்

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினைநிலை யுரைத்தல் வினவிற் கேற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்று
அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே (தொ. சொ. 66)

என்று கூறி வியங்கோள் வினைமுற்றும் பயனிலையாக வழங்கும் என்கின்றார்

எ—டு. ஆ செல்க, அரசன் வாழ்க

திணை—பால், எண் காட்டும் வினைமுற்றுக்களினின்று வியங்கோள் வினைமுற்று வேறுபாடுடையது என்பதைக் குறிக்கும் முறையில்,

வியங்கோள் எண்ணுப்பெயர் திணை விரவு வரையார்
(தொ. சொ. 45)

என்று கூறுகின்றார் தொல்காப்பியனார். இங்கு அவர் வியங்கோள்வினை. உயர்திணை, அஃறிணை ஆகிய இருதிணைப்பெயர்களும் எண்ணி வரும்போதும் தொடர்ந்து வர இடந்தருகின்றார்

எ—டு ஆவும் ஆயனும் செல்க.

மேலும் அவர் வினைகள் ஏற்கும் அசைகளை இடையியலில் கூறுகின்றபொழுது வியங்கோள் வினைமுற்று முன்னிலை வினைச் சொல்லினின்று வேறுபட்ட அசை நிலையை ஏற்கும் என்பதை

மானவன் கிளவி வியங்கோள் அசைச்சொல்
(தொ. சொ. 273)

என்று குறிப்பிடுகின்றார்

எ—டு உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே
ஓர்கமா தேர்மணிக் குரலே.

வியட்கோட் பொருள்

தொல்காப்பியனார் காலத்தில் வியங்கோள் எப்பொருளில் வழங்கியது என்பது குறித்துப் பல அறிஞரும் பலவாறாகக் கருதுவர். வியங்கோள் வினைபற்றிக் கூறும் வினையியலில் அதன் பொருள்பற்றிக் கூறப்படவில்லை ஆனால் தொல்காப்பியனார் எழுத்ததிகாரத்தில் 'ஏவல் கண்ணிய வியங்கோட்கிளவி' என்று குறிப்பிடுவதினின்று வியங்கோள் ஏவல் கண்ணிய வினையேயாகும் என்று ஆசிரியர் கருதுகின்றார் என்று கொள்ளலாம். 'கண்ணிய' என்பது குறித்த என்ற பொருளை உடையது. எனவே வியங்கோள் ஏவலன்று; ஏவலைக்கருதிய வினையேயாகும்.

ஏவலைக் கருதிய வியங்கோளாகிய வினைச்சொல்லும் ஏவலைக் கண்ணாத வியங்கோளும் என்று இளம்பூரணரும், செய்க, வருக இவை ஏவற்பொருண்மையை முற்ற முடித்தல ; ஏவல் கண்ணிய எனவே ஏவல் கண்ணாதனவும் உளவாயின. அஃறிணை ஏவற்பொருண்மையை முற்ற முடியாதன' என நச்சினார்க்கினியரும் 'வியங்கோள் ஏவல் கண்ணியதும் ஏவல் கண்ணாததும் என இருவகைத்து. ஏவல் கண்ணியதாவது உயர்ந்தான் இழிந்தானை இன்னது செய்க என விதித்தல்; ஏவல் கண்ணாததாவது, இழிந்தான் உயர்ந்தானை இன்ன செய்யப் பெறவேண்டிக் கோடல்' எனக் கல்லாடனாரும் விளக்கம்தந்து வியங்கோளை இருவகைப் படுத்திக் காட்டுகின்றனர். ஆனால் தொல்காப்பியனார் ஏவல் கண்ணிய வியங்கோள் என்று குறிப்பிடுங்கால் இதனை வியங்கோளின் ஒருவகை என்று கருதினார் என்று கொள்ளச் சான்றுகள் இல்லை. எனவே ஏவலை விழைந்து குறித்தலை வியங்கோளின் விளக்கமாகவே ஆசிரியர் கொண்

டார் எனக் கருதுவதே சாலப் பொருத்த முடையதாகும், இதனையே இலக்கியச் சான்றுகளும் உறுதிப் படுத்துகின்றன.

ஏவல் வியங்கொண்டு இளையரோ டெழுதரும் (பதிற் 54)

என்னும் பொழுது 'ஏவல் வியங்கொண்டென்றது, இளையரை முன்பு போர்க்குக் கையும் அணியும் வகுப்புழி ஏவித்தாமும் ஏவல்களைச் செய்து என்றவாறு என்று பழைய உரைகாரர் குறிக்கின்றார்.

செல்கம் செலவியங் கொண்மோ (குறு. 114) இவண் செல வியங் கொண்மோ என்பது போக விடுவாயோ என்ற பொரு ளில் வந்துள்ளது.

வினைகடைக்கூட்ட வியங்கொண்டான் (சிலம்பு 9, 78)

கோவலன் வினைதூண்ட அதன் ஏவலை மேற்கொண்டான் என்ற பொருளில் வந்துள்ளது.

இவற்றையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால் பிறரைத் தொழில்கொள்ள விழைதலே ஏவல் கண்ணுதல் எனவும் அதனை உணர்த்தும் வினைச்சொல் வியங்கோள் வினையாகும் எனவும் கொள்ளுதல் பொருந்தும். தொல்காப்பியனார்கால வியங்கோள் ஏவலை விழைந்து குறிக்கும் வினையாகும். காலப்போக்கில் வியங்கோள் வேண்டல், விதித்தல், வாழ்த்தல், விழைதல் போன்ற வேறுபட்ட பொருள்களிலும் இடம்பெற்றுவிட்டது

அஃறிணையில் ஏவல் கண்ணிய வியங்கோள்

நச்சினார்க்கினியர், தொல்காப்பியனார் 'ஏவல் கண்ணிய வியங்கோட்கிளவி' என்று குறிப்பிடுவதினின்று வியங்கோள் ஏவல் கண்ணுதனவும் உளவாயின என்கின்றார். அஃறிணை ஏவற் பொருண்மையை முற்ற முடியாதன என்கின்றார். மேலும் அவர் "வியங்கோள் அஃறிணைக்கண் பெரும்பான்மையும் நிலை பெறாது, உயர்திணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறும்" எனக் கூறி "அஃறிணை ஏவற் பொருண்மையை முற்ற முடியாது என்பது உணர்த்துதற்கு மன்னுதாகும் என்றார்" எனப் புது மையான விளக்கம் தருகின்றார் [1]. தொல்காப்பியனார் கால வியங் கோள் ஏவலை விழைந்து வெளிப்படுத்துவது என்று கண்டோம். எனவே ஆவாழ்க எனின் அஃறிணையாயினும் அது வாழ்த்து கின்றவனது விழைவைப் புலப்படுத்தி, எழுவாய் 'வாழ்' என் னும் தொழில் கொள்ளும்போது அவன் ஏவல் செயற்படுதலின்

அஃறிணைக் கண்ணதாயினும் இதுவும் ஏவல் கண்ணிய வியங்கோளாம். எனவே தொல்காப்பியனார் கால வியங்கோள் எல்லாம் ஏவல் கண்ணியவையேயாம் என முடிக்குதும்

வியங்கோளின் வழக்கு

தொல்காப்பியனார் எட்டுவகை விரவுவினைகளைத் தொகுத்துக் கூறிப் பின்னர் முன்னிலையில் மட்டும் வழங்கும் முன்னிலை வினைமுற்றுக்களைப் பற்றிக் கூறினார். தொடர்ந்து அடுத்த நூற்பாவில் முன்னிலை ஒழித்த ஏனைய ஏழுவகை வினைச்சொற்களும் ஐம்பால் மூவிடத்தின் கண்ணும் வழங்கும் இயல்பின என்பதைத் தெளிவு படுத்துகின்றார். அடுத்த நூற்பாவில் அவர்

அவற்றுள்

முன்னிலை தன்மை ஆயி ரிடத்தொடும்
மன்னு தாகும் வியங்கோட் கிளவி (தொ சொ. 226)

என்று கூறுவது எழுவகை விரவு வினைகளில் வியங்கோள் வினையின் வழக்கினை மேலும் வரையறை செய்வதாக உள்ளது

தொல்காப்பியனார் 'மன்னுதாகும்' என்பதற்குச் 'சிறுவரவின' என இளம்பூரணரும், 'அவ்விடத்தொடு சிறுபான்மை வருதல் காண்க' எனச் சேனாவரையரும், 'அஃறிணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறுது; உயர்திணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறும் எனவும், அஃறிணை ஏவற்பொருண்மையை முற்ற முடியாது' என்று நச்சினார்க்கினியரும், நிலைபெறுது' எனத் தெய்வச்சிலையாரும் உரை கூறி உள்ளனர்' கல்லாடனார் நிலைபெறுது என்று உரை கூறினும் 'சிறுபான்மை முன்னிலைத் தன்மைக் கண்ணும் வருமெனக் கொள்க' என விளக்கம் தருகின்றார்.

சங்க இலக்கியங்களிலும் வியங்கோள் வினை முன்னிலைத் தன்மையில் வழங்குதலைக் காணலாம்

வாழியர் யான் (புறம், 365) தன்மை
பிரிக ——— (புறம். 71) தன்மை
காண்க யாம் (புறம். 160) தன்மை
ஈக (புறம். 289) முன்னிலை
உண்க (புறம். 319) முன்னிலை
தணிக (புறம். 70) முன்னிலை

தொல்காப்பியனுர் வியங்கோள் வினையை மூவிடங்களிலும் வழங்கும் ஏழுவகை வினைகளோடு சேர்த்துக் கூறிப் பின்னர் அது முன்னிலை, தன்மையில் 'மன்னுது' என்கின்றமையானும், சங்க இலக்கியங்களில் வியங்கோள் வினை பெரும்பாலும் படர்க்கையில் வழங்கினும் தன்மை முன்னிலையில் அருகிக் காணப்படுகின்றமையானும் பெரும்பான்மையான உரையாசிரியர்கள் 'மன்னுதாகும்' என்ற சொல்லுக்குச் 'சிறுவரவின' என்ற விளக்கம் தருகின்றமையானும் வியங்கோள் வினை தன்மை முன்னிலையில் வழங்குகின்றமைக்குத் தொல்காப்பியனுரே ஓரளவு இடந்தருகின்ருர் எனக் கருத இடமுண்டு.

சில ஆராய்ச்சி அறிஞர் தன்மை, முன்னிலையில் வியங்கோள் வினை அமைந்துள்ள பாடல்கள் தொல்காப்பியனுர் காலத்திற்குப் பின் இயற்றப்பட்டவைகளாக இருக்கலாம் என்று கூறுவது மிகப் பொருத்தமாகத் தோன்றவில்லை [2]. வேங்கடராகலு ரெட்டியார் அகரவீற்று வியங்கோள் என்பது ககர வீற்றினது என்று கூறி, ககர வீற்று வியங்கோளினையே தொல்காப்பியனுர் படர்க்கைக்கு உரியதாகக் கட்டுப்படுத்துகின்ருர் என்றும் ஏனைய ஈறுகளையுடைய வியங்கோள் வினைகள் தன்மை முன்னிலையில் வரலாம் என்றும் கருதுகின்ருர்[3] ஆனல் ககர வீற்று வியங்கோளும் தன்மை முன்னிலையில் வந்துள்ளமைக்குச் சங்க இலக்கியங்களில் சான்றுகள் உள்ளமையால் அவர் விளக்கம் ஏற்புடைத்தாகத் தோன்றவில்லை

எனவே 'மன்னுது' என்பதற்கு நிலைபெருது என்று பொருள் கூறி, அருகி வருதல் உண்டு; மிகுதியாக வழங்குதல் இல்லை என்று விளக்கங் கூறுவது தான் மிகப் பொருந்தும் ஏனெனில் முன்னிலையில் ஏவல் கண்ணிய வியங்கோளின் இடத்தில் நீ செல், நீ வாழ் போன்ற ஏவல் வினைகளும், தன்மையில் யான் வாழ்வல், யான் செல்வல் போன்ற வினைகளும் மிகுதியாக வழங்கின. தன்மையில் ஏவுதல் இல்லை. முன்னிலைக்கு ஏவல் வினையுண்டு. எனவே படர்க்கையில் ஏவலை விழைந்து குறித்த வியங்கோள்வினை பெரும்பாலும் வழங்கி இருக்கலாம் [4].

காலப் போக்கில் படர்க்கைக்கே சிறப்பாக அமைந்த வியங்கோள்வினை மூவிடங்களிலும் வழங்கலாயிற்று. எனவே தான் பிற்கால இலக்கண ஆசிரியர் நன்னூலார்,

> கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்
> இயலும் இடம்பால் எங்கு மென்ப (நன். 338)

என்று கூறி வியங்கோள் வினையினை மூவிடங்களுக்கும் பொது மையானதாகக் கொண்டார்

ஏவலும் வியங்கோளும்

தொல்காப்பியனுர் ஏவல் வினையை முன்னிலை வினையினின்று வேறுபடுத்திக் காட்டவில்லை. அவர் ஏவற் பொருளை வேறு படுத்திச் சுட்டியிருப்பினும், வினையியலில் ஏவல் வினை என ஒருவகை வினையினைக் குறிப்பிடவில்லை ஆனுல் வியங்கோள் வினையை வினையியலில் வேறுபடுத்திக் காட்டியுள்ளார் என்று முன்னரே கண்டோம். தொல்காப்பியனுர் காலத்தில் ஏவல் முன்னிலை வினையினின்று வேறுபடுத்தி அறியப்படவில்லை. ஏவல் வினை முன்னிலைக்கே உரியது சங்க இலக்கியங்களில் ஏவல் வினையைக் காணுங்கால் அது காலவேறுபாடு உடைய தன்று; ஆனுல் எண் வேறுபாடு உடையது. முன்னிலையில் வழங்கும் செயல்வினை (indicative verb) கால வேறுபாடும் உடையது.

வியங்கோள் வினை படர்கைக்கே சிறப்பாக உடையது. தன்மையிலும் முன்னிலையிலும் சிறுபான்மை வரலாம். வியங் கோள் வினைக்கு எண் வேறுபாடு இல்லை கால வேறுபாடும் இல்லை. திணை - பால் வேறுபாடும் இல்லை.

தொல்காப்பியனுர் ஏவல் வினையை வேறுபடுத்திக் காட்டா விடினும் பிற்கால இலக்கண நூலார் மின் அவற்றேவல் (நன். 337) என்று குறிப்பிட்டு ஏவல் வினையை வேறுபடுத்திக் காட்டு கின்றனர். காலப்போக்கில் முன்னிலை வினை வேறு; ஏவல் வினை வேறு என்ற தெளிவான வேறுபாட்டு நிலை அமையத் தொடங்கி விட்டது.

ஏவல் — அன்பேவல் — வியங்கோள்

இலக்கண ஆசிரியர்கள் முன்னிலை அசைகள் எனச் சில வற்றை இடையியலில் தொகுத்துக் கூறியிருப்பதைக் கூர்ந்து நோக்கி, அவை அமையும் சொற்களை ஆய்ந்து பார்க்குங்கால் அச்சொற்கள் ஏவல் குறித்த வினைகளாகவே அமைகின்றன என்பதை அறியலாம். அவற்றை ஏவல் வினைகள் என்றும் கூறலாம். ஆனுல் முன்னிலையசைகளை ஏற்கின்ற அவ்வினைச் சொற்கள் ஏவலை அன்போடு உணர்த்துகின்றன. எனவே அவற்றை அன்பேவல் என அழைப்பது சிறப்பாகும். இவற் றிலும் கால வேறுபாடு இல்லை. முன்னிலை அசைகளாக அமை

யும் மியா (—யா), மோ (—ஓ), மதி (—தி), மே (—எ), சின் (இன் < என்) ஆகிய இடைச்சொற்கள் அடிப்படையில் பெரும் விஞக் குறியீடுகளே அவை ஏவலை அன்போடு உணர்த்த ஏவல் வினைகளில் ஆளப்பட்டுள்ளன,

எ — டு	கோண்மியா	சேள்—ம்—(இ)—யா
	மொழிமோ	மொழி—ம் — ஓ (குறு-2)
	கொடுமதி	கொடு—ம்—(அ)—தி (புறம். 163)
	நின்மே	நில்—ம்—ஏ (நற் 300)
	வந்திசின்	வந்து—இ—(கு)—இன் (புறம். 105)
	சேர்மின்	சேர்—ம்—இன் (புறம். 9)

அன்பேவல் ஏவலை அன்புடன் வெளிப்படுத்தும் வினை. வியங்கோள் ஏவலை விழைந்து வெளிப்படுத்துவது அன்பேவல் முன்னிலைக்கே உரியது. வியங்கோள் படர்க்கைக்கே சிறப்புடையது அன்பேவல் அசை நிலை பெற்று வழங்கும்; வியங்கோள் விகுதிகள் பெற்று அமையும். அன்பேவல் எண் வேறுபாட்டுடன் அமைதல் உண்டு வியங்கோளுக்கு அவ்வேறுபாடு இல்லை. இரண்டும் ஏவல் கண்ணியவைகளே; இரண்டும் கால வேறுபாடு உடையன அல்ல.

வியங்கோள் வினை விகுதிகள்

தொல்காப்பியனுர் வியங்கோள் வினை விகுதிகளைப் பிரித்துக் கூறவில்லை. ஆனல் எழுத்ததிகாரத்தில் அகரவீற்றுப் புணர்ச்சியினைக் கூறுங்கால் "ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்" இயல்பாக முடியும் என்கின்றமையால் வியங்கோள் அகரவீற்றினைப் பெற்றியலும் என்பதை அவர் சுட்டிக் கூறியுள்ளார். இதற்கு உரையாசிரியர்கள் செல்க, வருக போன்ற எடுத்துக்காட்டுகளைத் தருகின்றனர். தொல்காப்பியனுர் அடுத்த நூற்பாவில்

> வாழிய என்னும் செயவென் கிளவி
> இறுதி அகரம் கெடுதலும் உரித்தே (தொ. எ 211)

என்று கூறுகின்றுர். இங்கு வாழிய என்னும் 'செய' என்னும் வாய்பாட்டுச் சொல் இறுதி அகரம் (ய) கெட்டு வாழி என்று நிலைபெறும் என்கிருர். இங்கு வாழிய என்னும் சொல் 'செய' என்னும் வாய்ப்பாட்டினது என்று கூறினுரே யொழிய அதனை வினையெச்சம் என்ரோ வியங்கோள் வினைமுற்று என்ரோ குறிப்பிடவில்லை.

தொல்காப்பியனார். அகரவீற்றுப் புணர்ச்சியைக் கூறுங்கால் வியங்கோள் வினையைச் சுட்டிச் சொல்லுகின்றமையால் வியங் கோள் அவர் காலத்தில் அகர வீற்றினதாய் பயின்றது என லாம். எடுத்துக்காட்டாக வாழ, வாழிய, வாழ்க முதலியவற் றைத் தொல்காப்பியனார் கால வியங்கோள் வடிவங்களாகக் கொள்ளின் அ, இய, க என்பனவற்றை விகுதிகளாகக் கொள் ளலாம் ஆனால் இளம்பூரணர் தெய்வச்சிலையார் ஆகிய உரை யாசிரியர்களும், பிற்கால ஆராய்ச்சியாளர் வேங்கடராசலு ரெட்டியார் அவர்களும் தொல்காப்பியனார் வியங்கோள் ககர ஈறுடையது என்று விளக்கம் தருகின்றனர். தொல்காப்பியனார் மொழியில் முடிக (தொ. பொ. 48) ஓம்பல் (தொ சொ. 13.), ஓராஅல் (தொ. சொ 443) ஆகியர் (தொ, பொ. 79) போன்ற சொற்கள் வியங்கோள் வினைகளாக ஆளப்பட்டுள்ளன. இவை களில் முறையே க அல். ஆல், இயர் ஆகியவை விகுதிகளாக அமைகின்றன

உரையாசிரியர்கள் வியங்கோள் விகுதிகளைப் பகுத்துச் சொல்வதில் பல்வகையாக வேறுபடுகின்றனர். இளம்பூரணர், தெய்வச்சிலையார் ஆகிய உரையாசிரியர்கள் வியங்கோள் ககர விகுதியுடன் மட்டும் அமையும் என்கின்றனர். சேனாவரையர் க, யா, அல் ஆகிய விகுதிகளைத் தந்துள்ளனர். நச்சினார்க் கினியர் க, யா, அல், ஆல், அர், ஆர், மார், ஐ என்னும் விகுதிகளையும் கல்லாடனார் க, அர், ய, அல். ஆர், மார், ஐ ஆகிய விகுதிகளையும் தந்துள்ளனர். நன்னூலார் கயவொடு ரவ்வொற்று ஈற்ற (நன். 338) என மூன்று விகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கண விளக்க ஆசிரியர்,

யவொடு கரல்வொற் றல் ஆல் உம்மார்
ஐகா னீற்ற வியங்கோள் முற்றவை
எய்து மிடம்பா லெங்கு மென்ப (இ. வி. 239)

என்று கூறி ய. க. ர். அல், ஆல் உம், மார், ஐ ஆகியவற்றை வியங்கோள் விகுதிகளாகத் தந்துள்ளார். கல்வெட்டுக்களில் கடவேன் ஆக, கடவார் ஆகவும். கடவீர் ஆகவும் போன்ற வினை வழக்குகள் காணப்படுகின்றன. காலப்போக்கில் நாம் செய்வோமாக, நாம் செய்யக் கடவோம் போன்றவை உளப்

பாட்டுத் தன்மைப் பன்மை அன்பேவலாக, அன்றேல் வியங் கோளாக வழங்கத் தலைப்பட்டுவிட்டன. மேலும் இக்காலத் தமிழில் வாழட்டும், சிறக்கட்டும், ஒழியட்டும், பெருகட்டும் போன்ற வியங்கோள் வினைகள் வழக்கில அமைந்து புது விகுதிகளைப் பெற்றுள்ளன.

இவ்வாறு வியங்கோள் வினைகள், விகுதிகள் ஆகியவற்றைக் கொள்வதில் இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் மிகுதியும் வேறுபடுதல் ஏன்? பிற்கால இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் வியங்கோளுக்குத் தொல்காப்பியர் கூறிய இலக்கணத்தை அவர் நெறி நின்று தெளிந்து அவர் கொண்டபடியே கொண்டிருப்பின் இத்தனை இடர்ப்பாடுகளும் ஏற்பட்டிரா. எல்லோரும் வியங்கோள் பற்றி ஒரே பொது இலக்கணத்தைக் கொள்ளவில்லை எனலாம். ஒருவர் வியங்கோள் என்றதை மற்றவர் வியங்கோள் எனக் கருதவில்லை. ஒருவர் வியங்கோள் எனக் கருதாததைப் பிறர் வியங்கோள் எனக் கொண்டனர். மேலும் மொழி வளருந் தன்மையது அது புதிய வழக்குகளைப் படைத்துக் கொள்ளலாம். பழைய வழக்குகளை இழந்தும் விடலாம். தமிழில் பல புதிய வியங்கோள் வினைகள் தோன்றியுள்ளன. இதுவும் வியங்கோள் வினை விகுதிகளைப் பற்றிய வேறுபாட்டிற்குக் காரணம் எனலாம்.

வியங்கோளும் 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சமும்

வியங்கோள் வினை தொடக்க நிலையில் 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தினின்றே வளர்ச்சி பெற்ற வடிவமாக அமைந்திருக்கலாம் இந்த நிலை தமிழில் மட்டுமன்று. தென் திராவிட மொழிகளிலும் குறிப்பாக மலையாளம், பழங் கன்னடம், துளு ஆகிய மொழிகளிலும் காணப்படுகின்றமைக்குச் சான்றுகள் உள தமிழ் மலையாளத்தில் பல வினைச் சொற்களின் 'செய' என்னும் வாய்பாட்டு வினையெச்சமும் வியங்கோள் வினைமுற்றும் —க்க என்ற ஒரே விகுதியுடன் அமைகின்றன. எ—டு. உரைக்க, படைக்க, சில வினைகளின் 'செய' என்னும் வினையெச்ச விகுதி அகரமாக அமைய வியங்கோள் விகுதி ககரமாக அமைகின்றது எ—டு. செய்ய, ஒழிய; செய்க, ஒழிக. இரண்டாம் வகையான வியங்கோள் வினைகளில் காணப்படும் ககர விகுதி முதல் வகையாக வினைகளின் வியங்கோள் விகுதியை ஒத்துக் காலப் போக்கில் தோன்றி இருக்கலாமோ என்று கருத இடமுண்டு.

எ—டு. ஒழிக்க (புறம். 216)
சிறக்க (புறம். 6)
மறந்தைக்க (கலி. 26)

எனவே, தொல்காப்பியனுர் காலத்தில் வழங்கிய வாழிய, வாழி போன்ற வழக்குகள் காலப்போக்கில் வாழ்க என்று மாறி அமைந்திருக்கலாம்...பழந் தமிழில் இய, இயர் ஆகிய விகுதிகளைப் பெற்ற வினைவடிவங்கள் வினையெச்சங்களாவும் வியங்கோள் வினை முற்றுக்களாகவும் ஆளப்பட்டுள்ளமை இதனை மேலும் உறுதி செய்கின்றது.

வினையெச்சம்

தன்கடன் இறீஇய போகிய காதலர் (குறு. 255)
பிணன் உணீஇயர் எருவை இழிய (பதி. 36)
மகளிர் தழை உடீஇயர் மரம
மதித்த மாகல் (அகம். 59)

வியங்கோள் வினைமுற்று

வாழிய (புறம். 9)
வாழியர் நீயே (அகம். 59)
நுங்கினை உணீஇயர் (பதி. 49)

பழந்தமிழில் இவ்வகையான வடிவங்கள் தொழிற் பெயர்களாகவும் ஆளப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

எ—டு. பசலை உணீஇயர் வேண்டும் (குறு 27)
விழவிற் செலீஇயர் வேண்டும் (நற். 370)

வியங்கோள் வினை பற்றிய இலக்கண நூலார் கொள்கைகள், அதன் அமைப்பு, பொருள் வழக்கு வியங்கோளுக்கும் ஏவலுக்கும் உள்ள தொடர்பும் வேறுபாடும், வியங்கோளின் வரலாறு ஆகியவை இக்கட்டுரையின்கண் விளக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புக்கள்

1. நச்சினர்க்கினியர், தொல்காப்பியச் சொல்லதிகார உரை 228

2. P. S Sastri, A Commentary on Tolkappiyam Collatikaram 226

3. Venkatarajulu Reddiyar, V.. Viyankol FORM. IV (1939—1940) PP. 1—24

4. தெய்வச்சிலையார், தொல்காப்பியச் சொல்லதிகார உரை 220

"வாழ் உண், தவிர் என்னும் ஏவல் குறித்த சொற்கள் தன்மைப் பெயர்க்கண்ணும், படர்க்கைப் பெயர்க்கண்ணும் ஏலாது முன்னிலை யொருமைப்பெயர்க்கண், நீவாழ், நீஉண், நீ தவிர் என ஏற்றலின், ஆண்டுப் பாலுணர்ந்துஞ் சொல்லோடு ஒரு நிகரனவாகி முன்னிலை வினையுள் அடங்கின. அப் பொருட்கண் தன்மை கூறும் வழி, யான் வாழ்வல், தவிர்வல் எனக் கூற வேண்டலின் அவை தன்மை வினையுள் அடங்கின. இனிப் படர்க்கைக்கண் வருங்கால், அவன் வாழ்க, உண்க தவிர்க எனக் ககரம் கடையாத்துக் கூற வேண்டுதலின் அவ்வாறு வருஞ்சொல் பாலுணர்த்தாமையின் வியங்கோன் என வேறு குறிபெற்றது"

பொழிலன்பர்கள் சுவைக்க.

உணவுக்கு எல்லாவற்றினும் சிறந்த சுவைப்பொருள் பசி.

— சாக்ரடீசு.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து

— திருக்குறள்

பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.

— கொன்றைவேந்தன்,

கம்பரின் வீரச் சுவை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

வாழ்வின் குறிக்கோளை அடைவதற்கான வலியினைப் பெருக்கும் சாதனங்களில் வீரம் ஒன்றாகும் அது போரின்கண் மாற்றவரை வென்று வெற்றி பெறுதலையும், இடையூறு எத்துணை நேரினும் விடாப்பிடியாய் கொண்ட கொள்கையினையும் எடுத்த காரியத்தையும் அஞ்சாத உள்ளத் திண்மையொடு நிறைவேற்றுவதையும் குறிக்கும். அது காதலையும் சீலத்தையும் வளர்த்து, அறத்தைப் போற்றும் ஆற்றலை வெளிப்படுத்தும். தியாகத்தையும் இன்ப மயமாக்கி, அகத்துச் சீலங்களை நாடியொழுகி ஊக்கம் பெருமிதம் முதலியவற்றையும் விளைவிக்கும். காதலின்பமும் வீரமும் முறையே தமிழ் மரபென்னும் அகம் புறம் என்பனவற்றில் அடங்குவதாகும். வீரத்தில் காதல் மலரும்: காதற் சீலத்தில் வீரமும் முகிழ்க்கும் காதலுக்கும் வீரத்திற்குமுள்ள தொடர்பின் மாண்பே, மக்களை வீர வுணர்ச்சி செயல்களில் ஈடுபாடு கொள்ளத் தூண்டி, அறம், அன்பு, அமைதி முதலியவற்றை உலகின்கண் நிலைபெறுத்த வல்லதாக வுள்ளது இத்தகைய வீரத்தினைக் கம்பர் தம் முள்ளத்தில் எழுந்து விளங்கும் கவிக் கனலால், காதல், பயம், பத்தி, வியப்பு, சோகம் முதலியவற்றோடு இணைத்து, சுவைப் பிறழ்ச்சி யாதுமின்றிக் காவிய முறையில், அறவழி பற்றிய வீரவாழ்வுக்குரிய இன்பத் துறைகளை வரைந்து, நாடக அடைவில் படம் பிடித்துக் காட்டுவாராயினர்.

கம்பரது இராம காவியம் உயர் வீரச் சுவை செறிந்தமைந்துள்ள சீரிய வனப்புடையது. இத்தகைய வனப்பினை, வீரத்தைக் குறித்து நிற்கும் இடங்கள் தோறும் மெய்ப் பாட்டுத் திறனோடு கம்பர் விளக்கி, ஆத்மச் சுடர் மிளிரும்படி. அறம் வாழ, வீரத்தின் சாந்த அமுதத்தை அள்ளிக் கொட்டுகிறார். இத்தகைய போக்கு ஓமர் (Homer) போன்றவர்களது காவியத்தில் காணக் கிடைக்காததால், ஓமரை ஒப்பர் கம்பர் எனக் கருதுதல் சிறிதும் பொருந்தாது; அவ்வாறு கூறுவதும் சிறப்புடையதுமன்று. உயர்ந்த நிலையில் வீரத்தின் சிறப்பியல்பினை யுணர்ந்து அதற்கேற்ப சொற்களை அனுபவித்து கற்பனைப் பொலிவால், அமைக்கும் படைப்பாற்றல் கம்பர் ஒருவரிடமே உளவாதல் வெளிப்படை. போர் முறைகளிலும் நிகழ்ச்சிகளிலும், கம்பர், அலையலையாய் வீரவுணர்ச்சிகளை நெளியக்

காட்டிக் கூறும்போது, அதனைச் சுவைக்குந்தோறும் நாம் பல் வேறு வகையாய இலக்கிய யின்பத்தைக் கவர்ச்சிபட, எல்லை யற்ற யளவில் பெறுவதாக உணர்வாற்றல் பெறுகிறோம். கதை யின் சிறப்பைக் காட்டும் இத்தகைய வீரச்சுவையில் நாம் எவ் வளவுக் கெவ்வளவு ஈடுபடுகிறோமோ, அத்தகைய அளவிற்கு அது நமக்கு அறிவையும், மனப்பண்பையும், வீர இன்பத்தை யும் குறையாது பெருக வைக்கும். இதனுன் அன்பு முதிர்ந்த நிலையினைத் துணையாகக் கொண்ட கம்பரது வீரச் சுவை நல்கும் இன்பப் பயனும் பொருளாதாரத்தில் கூறப்படும் (Law of Dimenishing Returns in Economics). குறையும் பயன் வரவு விதிக்கு உட்படாதென்பது உணரப்படும். இதன்வழி காவி யச் சிறப்பினை மட்டும் காட்டும் ஓமரையும், அவரைப் போன்ற பிறநாட்டு நல்லறிஞர்களையும் போர்முறை ஆட்சிகளை விளக்கும் துறையில், கம்பர் விஞ்சி விட்டாரென்பதை ஓரோ வழி ஆமோதித்தல் வேண்டும். கம்பரது வீறுசால் வீர காவி யத்தின் முன் ஏனைய மேனுட்டுக் காவியங்கள் யாவும், வெய்யி லிடைக் காட்டிள விளக்கொளி போலொத்தன. மற்றும் வீர யியலைச் சிறப்புற விளக்கும் காவியத் தன்மையில், ஏனைய காவி யங்களைக் கம்பரது இராமாயணம் வென்று வாகை சூடியதென் பது, உன்னும் அளவிற்கு உண்மை புலனுகும். எனவே, ஒப்புயர்வற்ற வகையில் வீரச் சுவை அமைந்துள்ள கம்பரது காவியம் முன்னணியில் வைத்துப் போற்றத்தக்கதாகும்.

கம்பரியற்றியருளிய தொடர் நிலைச் செய்யுளாகிய இராம காவியம், 'நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலை இராமன் தோள் வலி கூறினும்,' 'பொருளதனையும் வென்று புகழுளதனையுமுள்ளாய' என இராவணனது வீரத் தையும் நிலைத்து நிற்கச் செய்துளது. தாபமும் கொண்ட காம நோய்க் காரணத்தால். வீரமிக்க இராவணனைத் தோற் கடிக்க, இராமருக்கு வெற்றி வாய்ப்பு கிட்டியதென்பது.

'தாயினும் தொழத்தக்காள் மேல்தாங்கிய காதற்றின்மை
நோயும் நின்முனிவும் அல்லால் வெல்வரோ றுவலர் பாலார்'

என்ற வீபிடணன் வாக்கால் பெறப்படும். நாற்படை கொண்டு போர் புரியும் ஒப்புயர்வற்றுப் போற்றத் தக்க வீரர்களைப் பாடும் கல்வி வீரராய கம்பர் வீர ஆன்மக் கவிஞனுய்த் திகழ்ந்திலனேல், அவர்களது வீரத் தினவினையும், தீரத்தையும் பற்றிச் சுவைத திறம்படப் பாடலியலாதென்பது கூர்ந்து சிந்தித் துணர்வார்க்கு விளங்காமற் போகாது ஏதையும் தாங்கும் இதயம் வாய்ந்த

'வீரரையார் வியவாதார்' எனக் கம்பர் தன் காவியத்தில் கூறி, தனது வியப்பையும் பூரிப்பையும் தெளிவுபடுத்துவது காணாற்பாலது.

காவியப் பண்பினை எழிலுறச் செய்யும் எண் சுவைகளுள் தலை சிறந்து விளங்குவது பெருமிதச் சுவையே. இச்சுவை கல்வி, தறுகண், புகழ், கொடை முதலியவற்றின் காரணமாகத் திகழுதலே. ஆசிரியர் தொல்காப்பியர்,

'கல்வி, தறுகண், இசைமை, கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே'

என மெய்ப் பாட்டியிலில் கூறுவதினுன் கண்டு கொள்னப்படும். 'பெருமிதம்—வீரம்; கல்வி—தவம் முதலிய விச்சை; தறுகண் — அஞ்சு தக்கன கண்ட விடந்து அஞ்சாமை; இசைமை — இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும், பழியொடு வருவனவற்றைப் புரியாமையால் தோன்றும் புகழ்; கொடை — உயிர் உடல் உறுப்பு பொருள் முதலியவற்றைச் சமயம் நேர்ந்தபோது பிறருக்குக் கொடுத்தல்' என இதற்கு உரை கண்டார் பேராசிரியர். இதனுன், பல காரணங்களால் பிறக்கும் வீரம் பொதுவாக, ஒழுக்கத்தின் உயர்வாலும் கற்பின் திண்மையாலும் மிளிரவும் கூடுமென்பதும் நேரிதாகும்.

இராமர், ஒண்மைசால் ஒழுக்கத்துப் பண்பால் உத்தமராகவும், கல்வியறிவால் வித்தகராயும் விளங்கும் வீரப் பெருந்தகை: கற்பனகற்ற பெருங் கல்வியாளர். பல்கலைக் கல்வியில் துறைபோகியவர்; 'தென்சொற் கடந்தார்: வட சொற்கு எல்லை தேர்ந்தார்.' வாழ்விற்கு உய்ய நெறிகாட்டும் அவர் கற்ற தவக் கல்வி, தாம் உலகில் என்றும் அழியாமல் புகழுடம்புடன் இருக்குமாறு அமைந்துள்ளது. ஆற்றல் நிறைகலைப் புலமையாலும் இயற்கைப் புலமையாலும் முகிழ்த்த அவரது அளக்கலாகாத தெள்ளறிவு யாவற்றையும் வீரமுடன் ஒன்ருகக் காணும் தவப் பேறுடையது. அதனுற்ருன் அவர் காட்டையும் நாட்டையும் ஒன்ருகக் கருதினுரென்பது தெளிவு. மற்றும் அவர் வில்லாற்றலில் வல்லவீரர்: அறவியல்பிலும் சிறந்துயர்ந்த வீரர்; புலன்களை வென்ற வீரமிக்கார்: பிறர் மனை நோக்காப் பேராண்மையும் கெழுதகைய வீரத் திண்மையும் பெருமையுமுடையவர். தன் மனைவியன்றிப் இப்பிறவிக் கிருமாதரை மனத்தினுலும் இராமர் தீண்டாதவரென்பது, அசோக வனத்திலிருந்த சீதா பிராட்டியார் அனுமனை நோக்கி,

வந்தெனைக் கரம்பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக் கிருமாதரைச்
சிந்தையாலும் தொடேனென்ற செவ்வரம்
தந்தவார்த்தை திருக்செவி சாற்றுவாய்'

எனக் கூறிய மொழியே சான்று பகரும்.

இலங்கைப் பெரு வேந்தனாகிய இராவணனே, பெருந் தவத்தால் பிறந்து மிகப்பெரும் தவத்தையும் செய்த சிறந்த வலிமையுடைய வீரன்; 'கொற்றவாளையால் வண்டொடு காலையும் வரவு மாற்றியவன்': 'போரிடை மீண்டொருவர்க்கும் புறங் கொடாப் போர்வீரன்': களிக்கின்றூரன்றிக் கவல்கின்ரூரிலாது ஆட்சி புரிந்தவன்', ஆனால் இத்தகைய இணையிலா வீரன் காமப் பிடிப்பால் பேதையாய் நின்று, வீண் பழி தேடிக் கொண்டு, நலிந்து மெலிந்து சிறுமையுற்றானென்றும், பிறர் மனையேகி பிறருடைய இல்லாளை விரும்பிக் காம வேட்கை நோய் கொண்டதினன், வழம்பின்றி வீரப் பெரு மிதத்தோடு வாழ வானின் வாணாள், இன்னல் இடுக்கண் பல அடைந்து, தன் மனையோடு முடிந்ததென்றும் கம்பரது காவியம் கூறும் இதனை, ஈண்டு, சற்றே இயைபு கருதி, வள்ளுவரது வாய்மொழி கொண்டு கவனிச்கற்பாற்று.

எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

எனும் பொருட்பேறும் சொற்செறிவும் பொலியும் குறளில், பெருமை கருதி 'எனைத்துணையர்' என வள்ளுவர் முதற்கண் பன்மைப் பாலாற் கூறிப் பின்னர் அவர் தம் இழிதகவுடைய செய்கைத் திறத்தால் 'தேரான்' என இழிபு கருதி ஒருமைப் பாலாற் கூறி 'ர்' 'ன்' எனும் எழுத்துக்களின் வழி குறளின் கண் அரிய பொருளைத் தகுதி வகையால் ஏது நாட்டிக் காட்டி அதனன் நுட்பமும் திட்பமும் தெளியவைத்து, ஏற்றத்தைப் போற்ற வேண்டுமென்பதை எடுத்துக்காட்டும் வள்ளுவரது வல்லாற்றல், சிந்திப்பார்க்கு எளிதிற் புலப்படும். இதனைக் கொண்டும் ஈண்டே, இராமரது ஒழுக்கத்துப் புகழ்சேர் வீரத்தின் ஏற்றமும், இருக்கத்துக்குரிய காமப் பிந்து தலைக்கேறிய இணையில் வீரனாகிய இராவணனது தாழ்வு நிலையும் ஒருவாறு ஊகித்தறியப்படும்.

இராமர் தான் கற்றிருந்த வில்வித்தகத்தின் வீரத்தைக் கம்பர் மிகப் பொலிவுடன் காட்டிபிருப்பது கற்குந்தோறும்

இன்பம் பயப்பதாக யுள்ளது. கல்விப் பயனுகிய அறிவுடைமை இன்பத்தைக் கொடுக்க வல்லதென்பதும், கல்வியால் வருவது அறிவு விளக்கமும் ஒழுக்கத்துப் பெருமிதமுமாதலின், இன்பமும் பெருமிதமும் பெறக் கல்வி இன்றியமையாததொன்றென்பதும் ஈண்டு நன்குணரற் பாலது. பேராற்றல் கொண்டு வில்லை இறுத்தவர் சீதையை மணம் புரிந்து கொள்வரென்ற நியதியை முறியடிக்க வியலாதிருந்த பல நில வேந்தர்கள் வியக்கவும் நாணவும், இராமர் தமது நுண்ணிய விற்கல்வியின் அனுபவ வல்லமையால் எளிதாகவும் விரைவாகவும் வில்லை ஒடித்தார். என்றதைக் கூறவந்த கம்பர், இராமரது கல்வி பற்றிய வீரத்தை,

> தடுத் திமையாமல் இருந்தவர் தாளில்
> மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார்
> கடுப்பினில் யாரும் அறிந்திலர், கையால்
> எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்.

எனப் புகழ்ந்து மொழிந்துள்ளார். மற்றும் இராமர் இயற்கையறிவு, கல்வியறிவு உலகியலறிவு வாய்ந்து அருஞ் செயல் பல ஆற்றும் வீர வுள்ளந்தினரென்பதை ஈங்கு உன்னியறியும்படியும் வகை செய்துள்ளார், 'எடுத்தது கண்டனர்: இற்றது கேட்டார்' எனும் செஞ்சொற்றெடர்களில் இறை நெறி நின்று புகழோடு வரும் கல்வி பற்றிய வீரம் கருக்கொண்டு கிடத்தல் நுனித் துணரற்பாற்று இராமரது வீரம் அவர் தம் தோளின் கண் அமைந்துள்ளதை. காதற் பண்பொடு கூடிய அறிவுடைப் பெண்கள், முதற்கண், கண்டதை 'தோள் கண்டார் தோளே கண்டார்' எனக் கம்பர் கவினுறக் கழறி, இராமர் வீரத்தால் தன் புகழை நிறுத்தியவரென்று இயம்புவதைச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும். கரன் முதலிய வீரர்களும் குழுமி யெழுந்து இராமரை யெதிர்த்த ஞான்று, இராமர் தன்னந் தனியராய் அவர்களை வெரு வரு வெஞ்சமரில், 'வில் ஒன்றில் கடிகை மூன்றில்' வென்றமை, இராமர் சிறந்த வீரரென்பதற்குச் சான்று பகரும். மற்றும் கொடிய இருள் நெஞ்சத்து அரக்கர்கள் கலங்குமாறும், மூல பலத்தை நிர்மூலமாக்கிப் போர் புரிந்த இராமரது மீயுயர் வீரம், மனவமைதியைத் தரும் கல்வியைத் துணைகொண்டெழுந்ததென்பதும் ஓர் மெய்க் காட்டாகும்.

கல்வி யொழுக்கத்து மேம் பாட்டினைப் பற்றித் தழுவிப் இராமரது பெருமிதம், அவர் இராவணனது தம்பி விபீடணனுக்கு அடைக்கலமளித்த பெருந்தகைமையில் காணத் தெளி

யப்படும் மற்றும் இராவணன், போர் முகத்தே படையிழந்து, யாதொரு படைக் கருவியுமின்றித் தன்னந்தனியனாய் நிற்கும் பரிதப நிலையைக் கண்ட இராமர் அன்பு செய்யும் ஆன்ற நெறி யோடு, மிக்கதோர் இரக்கம் பூண்டு, 'இன்று போய்ப் போர்க்கு நாளைவா' யெனத் தன் வீரச் சிறப்பு நயம் தோன்றுமாறு அருளியது பெரிதும் பாராட்டற்குரியது. ஈண்டு மறத் துறை யிலும் அறமே நிகழ்த்தும் இராமரது மனப்பான்மையும் அரு ளொடு கூடிய கல்வியறிவும் பெறப்படும். பகைவர்க்கருளும் இத்தகைய இனிமைப் பாடுடைய செப்பருங்குணம் கல்வி முற் றிய வீரமுடையாரிடத்தே கீர்த்தியுடன் சிறந்தொளிர்ந்து தக்க ஊற்றம் கொள்ளும் பான்மையது. ஆசிரியர் வள்ளுவரது கருத்தினை நன்குணர்ந்து தகவுடையதோருரை மலர்த்தும் பரிமேலழகர்

'பேராண்மை யென்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு'

எனுங் குறளுக்கு உரை காணுங்கால் 'ஊராண்மையாவது உபகாரியாவது' என உரைத்து 'இலங்கையர் வேந்தன் போரி டைத் தன் தானை முழுவதும் படத் தனியனாய் அகப்பட்டானது தன்மையை நோக்கி, அயோத்தியர் இறை, மேற் செல்லாது 'இன்று போய் நாளை நின் தானையொடுவா' என விட்டாற் போல்வது அது என வீரக் கருணைச் சிறப்பு தோன்றக் கூறிச் செல்லும் மதி நுட்பம் மகிழத் தக்கது. இதனான் தறு கண்மை காட்டும் வீரச் செயலும் அன்பைத் துணையாகக் கொண்டு நிகழ வேண்டுமென்பது ஒரு தலையாகும் தளர்வுற்ற பகைவ னுக்குக் காட்டும் அன்புச் செயல் வீரத்தின் அறக்கருணையாய் மலர்ந்தது தழிஞ்சி யெனும் புறத்துறையின் பாற்பட்டு வியப் பினை எய்துவித்துள்ளது. போரினில் இராமரது கல்வியால் அமையும் வீரத்தைக் கண்டு வியப்புற்ற கும்பகருணன், 'ஐயன் விற்றொழிற்கு ஆயிரம் இராவணர் அமைவிலர்' என்றது இராமரது வீறுசால் வீரத் திறமையினைக் கண்டு அவனே வியந்து அகமகிழ்ந்ததாகுமென்பதிற் சிறிதும் ஐயமின்று இரா வணனும் இராமரது வீரத்தைப் போற்றி

'சிவனோ அல்லன்; நான்முகனல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வரமெல்லாம் அடுகின்றான்

எனப் பல்கால் பாராட்டியது மிகையாகாத மெய்ம்மை சான்றது.

கம்பர் 'தனுவினிருவர் ஆற்றலே' வீரச் சுவைபடக் காவியத்தில் குறிப்பிடுவதால். 'நிறையும் ஞானத்து உத்தமராய' இராமரை ஒத்த வீரன் இலக்குவன் என்பது துணியப்படும். இவரது வீரமும் தாம் கற்ற கல்விபோன்று ஆழமும் அகலமுமுடையதாய் இராமரது வீரத்திற்கும் சளைத்ததன்று. இராவணனும் கல்வி முதலாயவற்ருல் அமையும் இலக்குவனது வீரத்தையும் உளமாரப் புகழ்ந்து. அவனுடன் போர் புரிந்து வெல்லுதல் அரிதெனக் கருதி, அவன் மீது பிரமன் அளித்த வேலினை ஏவினனென்ருல் அது இலக்குவனது வீரத்தினை அறிவித்துக் குறிக்கும் சிறந்ததோர் சான்ருகும். போரிட்டு வீரனுய்ப் புலையுறு மரணமுறுதலே புகழெனக் கருதுங் கும்பகருணன், வீரச் சொற் சிலம்பாடி வெறும் வாதம்பேசி இலக்குவனைப் போருக்கு அழைக்கும்போது, இலக்குவன் எள்ளுமுகமாக,

'வில்லினல் சொல்லினல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லினுல் சொல்லற் கற்றிலம்யாம்'

என வீரமிக இயம்பும் தீரம் செப்பம் பொருந்தியது காண்க. ஆற்றல் மிக வாய்ந்த அதிகாயனுடன் வில்லாளனுகிய இலக்குவன் அஞ்சாது அமர் செய்து அவனை விண்ணுலகிற்கேக வைத்தது, அவனது கல்வியறிவோடு கூடிய வீரவாற்றலை நாட்டுவதாகும். மற்றும் இலக்குவன், சிறந்த வீரனுகிய இந்திரசித்துடன் போர் புரியும்போது, வெல்லும் திறன் வாய்ந்த அவனது வலிமை, வீரம், திடம் முழுவதும் புலனுகின்றது. இந்திரசித்தை கூற்றுவனுக்கு இரையாகும்படி இலக்குவன் செய்ததால், இராமருக்கு அளவிலா ஆனந்த முண்டாகும்படி போர் முனையில் இராமரது வெற்றி எளிதாக வாய்க்குமாறு அமைத்துள்ளது அவனது உறுதியாய கல்வியறி வானெய்திய வீரத்தினை வலியுறுத்து மென்க. இராவணன் தன் தம்பி விபீடணன்மீது வேலினை எறிந்த ஞான்று, நாற்பெரும் பூதங்களின் ஆற்றலனைத்துமுடைய இலக்குவன் அவ்வேலினை. தன் மார்பில் தேக்கி. தன்னலமற்ற தன் வீரத்தின் விழுமிய நோக்கத்தை அறிவுலகம் ஏற்ப விளங்கவைத்து, கல்வியறிவோடு கூடிய மதிநுட்பம் தழுவிய தன் வீரத்தின் குறிக்கோளையும் முடிந்த பயனையும் திகழ வைத்தது போற்றற் குரியதாகும்.

தறுகண்மைப் பற்றிய வீரத்தை, புலமைத் திறத்தோடு, இராமர் பால் காணவைத்தார் கம்பர். வேள்வியினைக் காக்கும் பொருட்டு. விசுவாமித்திரர். இராம இலக்குமணரோடு செல்லும் பொழுது, அவர்கள். மருத வைப்பாயிருந்த நிலம் தாடகை

உறைவதின் நிமித்தம், பாலையாய் மாறியிருந்த எல்லையினை யடைந்தார்கள். ஆங்கு, 'மைவரை நெருப்பெரிய வந்ததென வந்த' கொடுந் தொழிலையுடைய தாடகையை, இராம இலக்குமணர் கண்டனர். தாடகையோ, பல நாடுகளை அழித்தவள்: தவங்களைச் சிதைத்தவள்: அருள் இரக்கமில்லாது பல்லுயிர்களுக்குச் சொல்லொணு இடையூறுகளை வீரத்தாலும் வஞ்சனையாலும் விளைவித்தவள். அகோர விகாரத்துடன் வந்த அரக்கி தோற்றதால், பெண்ணுக விருந்தும், செயலால் கூற்ருய் வயங்கி, இம் மூவரையும் கொல்லத் துணிந்து தன் கொடிய சூலத்தை அவர்கள் மீது எறிந்தாள். ஏவிய சூலத்தை இராமர் தம் அம்பினைக் கொண்டு துண்டமாக்கித் தன் வீரத் திறத்தைக் காட்ட, அக் கொடியாள், வரையின் கற்களை வாரிக்கொண்டு அவர்கள் மீது மாரிபோன்று பெய்தாள். வரிசிலை இராமர் அரக்கியைப் பெண்ணென மனத்துட்கொண்டு, அவளைத் தற்காப்புக்காகவும் கொல்ல முற்படுவது பழியும் பாவமுமெனத் தயங்கினதைக் கண்டார் முனிபுங்கவர் விசுவாமித்திரர். இராமரது மனப்போக்கை நன்குணர்ந்த முனிபுங்கவர், வாழுமுயிர்களைக் கொன்று தன் வயிற்றகத் தடக்கிய தாடகை, பெண்மைப் பண்பில்லாத பெண்ணுருக் கொண்டதோர் பேயென்றும், அதனைப் பெண்ணென எண்ணுதலும் பேதைமை யென்ருர்.

தீதென்று உள்ளவை யாவும் செய்தமைக்
கோதென்றுண்டிலள் இத்தனையே குறை
யாதென் றெண்ணுவதிக் கொடியாளையும்
மாதென்றெண்ணுவதோ மணிப் பூணிஞய்

பெண் கொலை புரிதல் ஆண்மை வீரத்திற்கும் புகழுக்கும் மாசு தரும் செயலாகுமென இராமர் வாளாயிருந்ததைக் கண்ட முனிவரர்,

ஈறில் நல்லறம் பார்த்திசைத்தேன் இவள்
சீறிநின்று இது செப்புகின்றேன் அலேன்
ஆறி நின்றது அறன் என்று அரக்கியைக்
கோறி ....

எனக் கட்டளை முகத்தால் இது செய்து நிறைவேற்றுக எனத் தன் முடிபினைத் தெரிவித்தார். அறம் வளர்க்கும் கண்ணுளன், முனிவரரது திருவுளத்தை அறிந்து அவர் வாக்கைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றுதல் அறம் செய்யும் முறையாகுமெனத் தன் வில்லை வளைத்து வாளி தொடுத்தான். அவ்வீரவாளி பேராற்றலோடு

'உலையுருவக் கனலுமிழ் கண்தாடகை தன்உரம்உருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற்று'

எனக்கம்பர் வீரச்சுவை மிளிர விளக்கம் செய்தது அறியத்தக்கது.

தாடகைவதம் தவமுனிவன் விருப்பின்படி முறையாக நிறைவேறியதைக் கம்பர் இராமரது சரத்தின் பண்புவழி வீரச்சுவையுடன் விளக்கிய அருமை பெரிதும் கருதற்பாலது. வீரவேகமுள்ள சரம், தவ ஆற்றல் மிக்குடைய விசுவாமித்திரரது சொல்லை ஒப்பது. சொல் என்பது ஒலி வடிவம். இச்சொல் ஒரோவழி தவமுடையார் வெகுளியில் கலந்து நிலை பெற்று நிற்கின் அது வெகுளப் பெற்றாரின் உயிரினையும் பருகும் பான்மைத்து. சொல்லினும் சரம் கிறந்ததென்பதை உணர்த்த, கம்பர், 'கடிய வேகச் சுடுசரம்' என்ற அடை மொழிகள் வழி இராமரது வீரக்கணையின் பேராற்றலை அறிய வைத்தார். தவம் செய்வார் சொல்லம்பினால் பிறரை அழிந்துபடச் செய்யின், அதனான்தான் பெற்றதவப் பயனை இழப்பர் தன்னலமுடைய விசுவாமித்திரர், தவப் பயனை இழக்க அஞ்சி, இராமரது துணை வேண்டி தாடகை வதத்தை நிறைவேற்றி, பிறர் நலம் பேணும் இராமரது தன்னலமற்ற வீரத் தன்மைக்கு தெய்வநல மெருகு கொடுத்துள்ளதை, கம்பர் ஈண்டு தெளிய உணர வைத்தார். பிறர் நலம்பேணித் தன்னலமற்ற இராமரது வீரப் பண்பு, முனிவர் செய்யும் தவத்தினும் உயர்ந்ததென்பதைக் கம்பர் சொல்லாமல் சொல்லிச் சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம்' இராமரது வரிசிலையில் பொருந்திய சரமென்று வண்ணச் சித்திரமாகச் சூத்திரம் கவினுறச் செய்து, அச்சரம் குறித்த இலக்கை அழித்து மீளவல்ல பண்பினையும் மாண்பினையும் தம்மதி நுட்பத்தால் உள்ளக் கிளர்ச்சி யுண்டாகும்படி ஒளிர வைததார் பெண் கொலை புரிதல் வீரருக்கு உரித்ததன்று ஆனால் ஈண்டு தவமிக்க முனிவர் விசுவாமித்திரரது சொல்லாணை விழுப்பத்துக் காரணமாகத் தாடகைவதை நிகழ்ந்ததென்பது புலப்பட, முனிவரது சொல்லைச் சரத்துக்கு ஒப்பாகக் கூறியது அறிதற்பாலது. இதன்வழி,

ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை யெனும் பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை யிராமன்

எனக் கூனி வாயிலாக எழுந்த பழிப்புரையினை மறுக்கு முகத்தால், இராமரது சரம் முனிவர் சொல்லை ஒப்பது எனக் கம்பர் மொழிந்து, அச்சரத்தின் ஆற்றலையும், சொல்லினது ஆற்றலை

யும். ஒருங்கே சித்திரித்து, முனிவர் ஏவல்வழிச் செய்யும் இராமரது செயலின் வீரத்தையும் பழியின்மையினையும் காட்டியுள்ளார். மற்லும் பல மக்களைக் கொன்று தன் வயிற்றகத்தே யடக்கிய கொடிய தாடகையை முனிபுங்கவர் கருத்திற்கேற்ப, பெண்ணென்று கொள்ளாது, இராமர், தன்னந் தனியனுய் அவளை எதிர்த்துக் கொன்று வென்றதும் விந்தையாய சிறந்த புகழையே உண்டாக்கும் வீரமாகுமெனக் கம்பர் திறம்பட அருளியுள்ளதை ஊன்றி நோக்குக: சொல்லுக்கும் சரத்திற்குமுள்ள தொடர்பையும் உன்னுக.

தறுகண்மை பற்றிப் பிறக்கும் வீரத்தைக் கம்பர், கழுகு வேந்தனுகிய சடாயுவின் மூலம் எழிலுற எடுத்திசைத்து, சடாயுவின் கதையைக் காப்பியத்தோடு ஒன்றிய கதையாகவே அமைத்துள்ளார். மற்றும் சீதாப்பிராட்டியை இராவணன் தூக்கிச் சென்றதைக் காப்பியத்தின் திருப்புமையமாகக் கொண்டு அவ்வாறு தூக்கிச் சென்றவர் யாவர் என்பதைக் காப்பியத் தலைவனுக்கு உணர்த்திய கிழட்டுச் சடாயுவை ஒரு பெரு வீரனுகக் காட்சியளிக்கச் செய்து, சடாயுவின் வீரத் துணிச்சலை, கம்பர், தன் வீரகாவியத்தில் முறுக்கேற்றி வைத்துள்ளார். மற்றும் கழுகின் உடம்பு கொண்டு மனிதப் பண்பு வாய்ந்துள்ள சடாயு இராவணனுடன் புரியும் போரில் பிறருக்காகத் தன் இன்னுயிரையும் அருள் காரணமாகத் தியாகம் செய்து அறம்வாழ புகழுக்கு உயிர்கொடுத்த வீரத் தன்மையினையும் சுவைபட விளங்கவும் வைத்தார். தறு கண்ணின் வழி, வைரம் பாய்ந்த வீரத் தன்மை, தன்னுள்ளே ஓங்கி எத்தகையவாறு பலருமறிய இயங்கி நிற்பதை சடாயுவின் வழி, கம்பர் எடுத்துக்காட்டி, அறத்தில் சிறந்து வீரத்தில் மிகுந்து விளங்குபவர்களுக்கும் சடாயுபோன்ற பறவையினங்களும் எவ்வணம் துணை புரியு மென்பதை அறிவுறுத்திய பாங்கு வியத் தற்பாலது இதனுண்மை வளம்தனைக் கம்பர் வாக்கினைக் கொண்டு இவண் கருதற்பாற்று.

வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளினையுமுடைய இராவணன், சீதையிருந்த பர்ணசாலையினைத் தரையொடு பேர்த்தெடுத்துத் தேர்மேல் வைத்து, கடிய வேகத்தில் விண்மிசை, கவர்ந்து செல்லுங்கால், கிழடு வாய்ந்த சடாயு இராவணனை எதிர்த்து 'எங்கடா போவதெங்கே? நில், நில்' என வீரவாசகம் செப்பி,

'பேதாய்! பிழை செய்தனை பேருலகின்
மாதா அனையாளை மனக் கொடு நீ
யாதாக நினைத்தனை எண்ணம் இலாய்'

என ஏசிப் பேசியது. பின்னர்,

ஏகுவது எங்கு? வானிலோடு இத்தனைத்
திசையையும் மறைப்பேன் ஈண்டு'

எனத் தன் வலிய சிறகுகளை விரித்து வழியினை மறைத்து நின்றது. 'குன்றுலப்பினும் உலப்பிலாத் தோளினனாகிய' இராவணன் சடாயுவை அகன்று போகும்படி அதட்டவே, சடாயு அறவுரை பல கூறி இராமரின் ஆற்றல்களையும் இயல்புகளையும் இயம்பியது. சடாயு கூறியதைக் கேட்ட இராவணன் 'காய்ந்த இரும்புண்ட நீர் மீளினும் என்பால் இருப்பவளை எவராலும் விடுவிக்க இயலாது' என்றனன். அப்பால், அஞ்சா நெஞ்சங் கொண்ட கழுகரசன், இராவணனது வீணைக் கொடியினையும், வில்லினையும் முறித்து வீழ்த்தி அவனுடைய தோள்கள் மீது பாய்ந்து மூக்கினால் கொத்தியும், இடி முழக்கம் போல் பேரொலியுண்டாயது சிறகுகளினால் புடைத்தும் அவனது மார்பிலிருந்த முத்து மாலையினை அறுந்து, அவனது வில்லை பற்களால் கடித்து எறிந்தது. இராவணனைச் சிறகால் அடித்து அலகால் கடிக்கவே அவன் மூச்சற்று இருந்ததைக் கண்ட சடாயு மீண்டும் அவனைத் தாக்குதல் வீரமன்று என தாக்குதலைத் தவிர்த்து 'உன் வலி இம்மட்டோ' என இகழ்ந்தது, பின்னர், தேர்ப்பாகனது தலையைத் துண்டித்து அதனை அல்ல் ஆண்மையையுடைய இராவணனது முகத்தில் வீரமனத் துணிவோடு எறியவே, வெகுண்ட இராவணன், சடாயுவை வெட்டி வீழ்த்தினன். வீர விளக்காய்த் திகழ்ந்த சடாயுவை, சோக இருள் கவிந்து கொள்ள, சீதை,

'நல்லவன் தோற்பதே நரகன் வெல்வதே
வெல்வதும் பாவமோ, வேதம் பொய்க்குமோ
இல்லையோ அறம்'

என அரற்றினது. சந்தர்ப்பக் கோளாறினால் தனியனாய் நின்று தோற்றவன், அறநெஞ்சுடைய வயது முதிர்ந்த மன வலிமை கொண்ட நல்ல வீரன் என்ற வியப்பில் கம்பர் தம்மை அழுந்தும்படி செய்து விடுகிறார். சடாயு வெந்தொழில் திறல்விடு பெற்ற திறத்தை' அவனது வீரவாழ்வில் தெய்வ அனுபவமாக விளங்க அமைத்து, வீர சிந்தை நல்லறத்தில் செல்லும் மாண்பினையும், தறுகண், பெரு மிதத்தில் அரியணை கொள்ளும் பண்பினையும், கம்பர் காட்டியுள்ளது கருத்திற் பதித்தல் வேண்டும்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

திருக்குறட் கருவூலம்

(மலர்மிசை யேகினுன்)

(நக்கீரன் வழியடிமை வித்துவான். பி. மா. சோமசுந்தர முதலியார்,
இராணிப்பேட்டை)

ஆய்வாளர்களாற் சமணர் என்று கருதப்படும் காலிங்கர் மலர்மிசை யேகினுன் என்பது 'எல்லாருடைய நெஞ்சத் தாமரையினுஞ் சென்று பரந்துள்ளான்' என்று நேரிய பொருளேயே உரைத்தனரேயலாது 'பூமேல் நடந்தான்' என்ற தந்செய்வப் பெயரைப் புகன்றனரலர். இதனையுணராது புதிய பாடச் சிவபுராணத்தார் 'மலர்மிசை யேகினுன்' என்றது 'பூமேல் நடந்தான்' என்னும் பெயர்கொண்ட தெய்வத்தையே என நாட்டப் பெரிதும் முயன்று அந்நாட்டல் நலிவுருதிருப்பான் திருவள்ளுவர் சமணரேயாவர் என்று நாட்டமுயன்று சில சொல்லினர். அவர் காட்டிய சான்றுகளில் எதுவும் வலியுடைத்தாய் வயங்கிற்றில்லே இதனே ஒரு சான்று காட்டி நிறுவுவாம்.

சமண் சமயத்தவர் பிற சமய நூல்களைக் காட்டுங்கால் இது நின் ஒத்து. இது பிறர் ஒத்து என முன்னிலையிடத்தும். படர்க்கையிடத்துஞ் சுட்டிக் கூறுவர். தஞ்சமயத்தவர் நூல்களைக் காட்டுங்கால் இது எம் ஒத்து எனத் தன்மையிடத்து வைத்துக் கூறுவர். நீலகேசி உரையாசிரியர் இவ்வழக்கினைப் பின்பற்றித் திருக்குறளைக் காட்டி இது எம் ஒத்து என்ருர். ஆகலின் திருவள்ளுவர் சமண் சமயத்தவரே என்பது இவர் காட்டும்முடிபு.

இவ்வழக்கு நில்லாது. என்னே? திருவள்ளுவரைத் தம் சமயஞ் சார்ந்தவராகாரென்று எச் சமயத்தவர் தெரிக்கின்றனர்? யாவரும் அவரை எம்மவர், தம்மவரென்று உரிமை கொண்டாடித் தம் மதத்தவரென்றே நிலே நிறுத்துவர். அந்நெறியே பற்றி நீலகேசி உரையாசிரியரும் 'இது எம் ஒத்து' என்றுரைத்ததிலொரு வியப்புமின்ருகலானென்க.

அற்றன்று. சமண் சமயத்தவர் பிறமத ஆகமங்களைப் பிற மதத் துறவிகளை வணங்குதல்—விரும்புதல் ஆகாது வணங்கினல் — விரும்பினல் அவிநயம் என்னுங் குற்றந்தொடரும். எனவே நீலகேசி உரையாசிரியர் அக்குற்றம் செய்யார். இதற்குச் சிலப்பதிகாரத்து வருங் கவுந்தியடிகளுஞ் சான்ருவார் எனின், நன்று சொன்னுய். காடுகாண் காதையில் அத்துணை

யறைந்த கவுந்தியடிகள். வேட்டுவ வரியில் ஐயை கோட்டம் புக்கதும் வேட்டுவர் ஐயையைப் புகழ்ந்தவாறு கேட்டிருந்தும், ஊர் காண் காதையில்,

"தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றே

என இராமனைப் புகழ்ந்து கோவலனைத் தெருட்டியதும் எந்நீர்மைத்தோ? இதனையுணராது கூறினை. ஆகலின் இக்கோள் வலியுடைத்தன்று என்க. அன்றியும், சாவக நோன்பியென் றேத்தப்பட்ட கோவலன் பாய்கலைப் பாவை மந்திரம் ஓதியதும், புறஞ்சேரி யிறுத்த காதையில் துர்க்கையது வெற்றி பொருந்திய அசுரரோடு பொருத போர்க் கோலத்தைப் பாடும் பாட்டாண்மையுடைய அம்பணவரில் தானுமொருவனுக் கலந்ததும், குணவாயிற்கோட்டத்து அரசு துறந்திருந்த இளங்கோவடிகளார் தஞ்சிலப்பதிகாரத்தே புகழாத தெய்வமுமில்லை; கூறாத புராணக் கதைகளுஞ் சைவ, வைணவ நூல்களிற் காணல் அரிதாம் என்பதும் நோக்காதெழுந்ததே நுங்கட்டுரையென்க. இந்நாளில் ஆய்வு நெறி பலபட வோங்கியிருந்தும் திருவள்ளுவர் பற்றிய உண்மை வரலாறு காண்டற் கரிதாயுளதாக, இஃதியாதுமில்லாதும், நூல்களைப் பெறுதல் அரிதாயுமிருந்த காலத்தே உரை வரைந்த நீலகேசி உரையாசிரியர் திருவள்ளுவர் சமயத்தை உணர்ந்தவ ரென்றல், பூப்புப் பருவமடைந்தும் மகப்பேறு வாயாவயிறு பூப்பு எய்து முன்னமே மகட்பேறெய்திய தெனலை நம்புக வென வற்புறுத்துதலேமானும்.

நூலாசிரியரும் உரையாசிரியருந் தத்தங் கருத்தை வெளியிடும் முழு உரிமை பெற்றவர்கள். நூலாசிரியரினும் உரையாசிரியருக்கு இவ்வுரிமை சிறிது குறைவுடையதே. என்னை? உரையாசிரியர் தங்கருத்தை நாட்டப்புக்கு நூலைமாறுகொள விரிக்கலாகா தாகலான். எனவே கற்பவர்கள் கருத்துக்கிசைய அவர்கள் நூலைப்படையார். படைக்க முயலினும் அம்முயற்சி முற்றுப் பெறுதென்க. என்னை? கற்போர் பல திறப்பட்டோராகலின் இதனைத் தெரியாது ஒரு நூலில் தம் மனக்கிசையாதனவெல்லாம் இடைச் செருகலெனக் கழித்தலும் பாடத்தைத் திருத்தலும் பரிபவப்படுவதேயென்க இதனால், கற்போர் நூலாசிரியர் கருத்தை யுணர வேண்டுவதே செய்யற்பாலதென்றுணர்க.

மற்றும் இவர் திருவாசகத்துக்குப் புதிய பாடங்களைத் தோற்றுவித்தமைக்குக் காட்டும் ஏதுக்கள் எறுபூடையவல்ல. சான்றுகள் சில தருவோம்:

(அ) 'இயமான னும் விமலா' என்பது மோனைத் தொடையான் முரணுறுவ தென்றொரு காரணங்காட்டி 'இயமான் விமலா' என்று திருத்தியமைத்தார்.

இக்காரண மேற்புடைத்தாமாயின் தொல்காப்பிய முதல் இன்றுள்ள நூல்கள் வரை யாவும் திருத்தப் படல்வேண்டும். இந்நெறியை ஏனைய புலவர் பெருமக்கள் பின்பற்றி ஒழுகினால் நம் பின்னோர்க்கு ஒரு நூலும் கிடைக்காது; சிக்குண்டழிந்துபோம் பஞ்சின் நூலையொப்ப அறிவு நூலுஞ் சிதைவுண்டு அழிந்துபடும்.

ஆகலின், நாம் எந்நூலையும் அது நமக்குக் கிடைத்த உருவோடு, பேணி வருதலே கடப்பாடா மென்றறிக.

(ஆ) ''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே'' என்பதன் கண் 'சாராமே' என்ற பாடஞ் சிறப்பின்மையான் 'சாராமல்' என்று திருத்தப்பட்டதென்றார். சிறப்பின்மையாமாறு யாது எனத் தெளிவுறுத்தாரல்லர்.

இன்னணம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொடரைச் சிறப்பின்மை என்று காட்டித் திருத்துவரேல் எந் நூல் உய்யும்? உய்யாது படுமென்க.

(இ) 'அன்பருக்கன்பனே யாவையுமா யல்லையுமாம்' என்பதன் கண் 'யாவையுமாயல்லையுமாம்' என்ற பாடத்தை எற்றுக்கோ 'யாவுமாகி அல்லவாகி' என்று திருத்தினர். காரணங் காட்டிலர்.

இத்தன்மைசார் நூல்களையெல்லாம், சார்புபற்றிய, நடுவிகந்த என்றே அறிஞன்மார் கொள்ளுவர்

இதுகாறுங் கூறியவற்றான் 'மலர்மிசை யேகினான்' என்பதனுக்குப் பரிமேலழகருங் காலிங்கருஞ் சொற்றதே உண்மைப் பொருளென்பதும் நுண்ணுணர்வின ரெல்லாரும் அவ்விதமே உரைகண்டனரென்பதும் பெற்றாம்.

உக. மாணடிசேர்ந்தார்

மாணடி என்பது மாட்சிமைப்பட்டது எவ்வாற்றான் மாட்சி மைப்பட்டதோவெனின் உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள் எனப்பட்டு மாட்சிமைப் பட்டதென்க. தாங்குதலாவது முதல் வனை யணைந்தவுயிர்கள் தண்ணீரைச் சேர்த்த உப்புப்போல முதல்வன் திருவடியைத் தலைப்பட்டு நிகழ, முதல்வன் திருவடி அவ்வுயிர்களை விட்டுக் கவர்த்தலின்றி இயைந்து நிற்றலாம். இஃது "ஒப்பிலாதன வுவமனிலிறந்தன வொண் மலர்த்திருப் பாதத்தப்பனுண்டு தன்னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே" என வரூஉந் திருவாசகத்தானுணரப்படும் இதனையே ஆள் கொடுத்தின்பங் கொடுத்து கோளாகத், தாள்கொடுத்தான் என்று திரு மந்திரம் ஓதும்.

இனி மாணடி சேர்தலாவது 'நின்னளந்தறிதன் மன்னு யிர்க் கருமையின், நின்னடியுள்ளி வந்தன னின்னொடு, புரையு நரில்லாப் புலமையோய்' என்றபடி அணைதில். துப்பில் பொருள்களைத் துப்பெனக் கருதித் துயருந்து மாயும்மன்பதைத் தொகுதியினியல் புணர்ந்தும், இன்பெனக் காட்டித் துன்பினைத் துய்ப்பிக்கும் உலகப் பொருள்களினுண்மையுணர்ந்தும், பற் றைப் பற்றறப் போக்கிப் "பார்த்தாலும் நினைத்தாலும் படித் தாலும் பகுக்கப் பக்க நின்று கேட்டாலும் பரிந்துள்ளுணர்ந் தாலும், ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத்தாலும். இத் தனைக்குத் தித்திக்குந்" திருவடியின் பேரின்பப் பெற்றி தெனிந்து. அத்திருவடியை அரைக்கணம் நீங்காது ஏத்தி வாழ்தலேயாம். அதனை,

"சிந்தையி னுள்ளே யெந்தை திருவடி
சிந்தையு மெந்தை திருவடிக் கீழது

எனத் திருமந்திரந் தெளித்தலை உய்த்துணர்க.

உஉ. அணைந்தோர் தன்மை

இன்னணம் மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் எய் தும் பயனாக நிலமிசை நீடுவாழ்வார் என்றார் பொய்யா மொழிப் புலவர் நிலம் என்று பொதுப் படக் கூறியவதனான் இவ்வுல கின்கண்ணும் மேலுலகின்கண்ணு மென்று கொள்ளப்படும் என்பது மணக்குடவர் உரை. இவ்வுலகின்கண் வரும் எத் துன்பாலும் பற்றப்படாது திருவடிச் சார்பினால் இன்பமே துய்த் திருப்பர் மாணடி சேர்ந்தாரென்க

"வைதவன் தன்னை நன்று வாழ்த்தின னெனவுந் தீய
செய்தவன் தன்னை நல்ல செய்தவன் எனவுங் கொள்வோன்
கைதவ மகன்ற முத்தி கண்டவ னவ்வா றுன்றுன்
பொய்தவ னென்ப தென்று புகன்றனர் புலவ நன்றே

என வரும் பிரபுலிங்க லீலையும் அணைந்தோர் தன்மையை அறிவித்து நிற்கும். இவ்வாறு இப்புவனியில் வாழ்ந்து இறைவனோடிரண்டறக் கலந்த பின்னரும் புவிமாந்தர் அவரையும் அவரருளிச் செயல்களையும் போற்றிக்கொண்டு வழிபடா நிற்பர். இங்ஙனம் அவர் இந்நிலமிசை நீடுவாழ்வர்.

இனிமேலுலகின் நீடு வாழ்தலாவது

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே"

என்றபடி கலந்து வாழ்தல், திருமந்திரக் கூற்று எல்லா நிலைக்கும் பொருந்துவ தென்பது குறிப்பிடற்பாற்று.

திருவடியணைந்தோ ருறுமின்பத்தை,

"கரும்புந் தேனுங் கலந்தோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய வானந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே"

எனந் திருமந்திரந் தெளிக்கும் இதனையே,

'பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற
பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னுன்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தத் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக்
கைத்ததுவே"

என்று கந்தரலங்காரமுங் கழறிடுதல் ஓர்க.

இவ்வாறு இறைவன்றன் மாணடியைச் சேரலுற்றார் பெரும் பயனை 'நீடுவாழ்வார்' என்று அறிவுறுத்தியருளினர் தெய்வப் புலவர் என்க.

அடுத்த கட்டுரையில் 'வேண்டுதல் வேண்டாமை யிலானடி' எனுந் திருக்குறளைக் காண்போம்.

"சம்பந்தரும் பௌத்தமும்"

டாக்டர் சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட், பிஎச் டி,
தமிழ் விரியுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

சமண பௌத்த புறச் சமயங்களின் போதனைப் போர்வையில் முடங்கிக் கிடந்த தமிழ் மக்களின் கூனலை நிமிர்க்கத் தோன்றிய கோளரிதான் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் கங்கைக் கரையில் பிறந்த புறச் சமயங்களைக் காவிரிக் கரையில் பிறந்த சிவஞானச் செல்வர் வேரோடு வீழ்த்தித் தென்னுடைய சிவனெறியை எந்நாடும் ஏற்க நிலைநிறுத்திச் சைவமும் தமிழும் செழித்துத் தழைக்க அயராது உழைத்த அருளாளர் ஆவர் சாக்கியத்தையும் சமணத்தையும் தாக்கக் கூடிய தகுதிபடைத்த தறுகண்மை மிக்க மைந்தனைச் சிவபாத இருதயரும் பகவதி அம்மையாரும் தவம் செய்து பெற்றனர். என்பதைச் சேக்கிழார் வாக்கினை நோக்கி உணரலாம்

வேதங்களையும் வேள்விகளையும் உயிர்க்கொலையினையும் வருணப் பாகுபாடுகளையும் சமுதாய ஏற்றத தாழ்வுகளையும் சாதிக் கொடு நீதியையும் மறுப்பதற்காகவும், கருணையும் கனிவும். அன்பும், அருளும், அமைதியும், சீலமும். நீதியும் நேர்மையும் உலகெங்கும் பரப்புதற்காகவுமே தோன்றிய பௌத்தத்தை இந்திய நாட்டிலே. இந்தத் தமிழகத்திலே தாக்கக் கூடிய அறிவுரனும் தடுத்து நிறுத்தக் கூடிய ஆன்மீக பலமும் படைத்த அருளாளர்களை ஞான சம்பந்தனுக்குமுன் இந்தத் தமிழகம் ஏன் தரவில்லை. சிந்திக்க வேண்டும்.

வரலாற்றுப் பின்னணி :

கி பி 6 7-ஆம் நூற்றுண்டு வரலாற்றினை உன்னிப்பாக உற்றுநோக்கின் உண்மைகள் சில புலப்படும். சிறந்த சிவனேசச் செல்வராகிய ஹர்ஷன் புத்தனைப் போற்றிப் புகழ்வதை நாகானந்தம் என்ற நாடகத்தாலும், அவன் அவைக்கு வந்திருந்த யுவான்சுவாங் என்ற சீன வழிப்போக்கன் குறிப்பாலும் உணர்கிறோம். இதே காலத்தில் சமணுக வாழ்ந்து மத்தவிலாசப் பிரகசனம் என்னும் நாடகம் யாத்துப் பௌத்தத்தைப்

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் திருவிடைமருதூரில் நிகழ்ந்த திருமுறைக்கருத்தரங்கில் 14—5—1972 இல் படிக்கப் பெற்றது.

பழித்துரைத்துப் பின் சைவனாக மாறிய மகேந்திரவர்மனின் கல்வெட்டில் திருமாலின் அவதாரங்களில் ஒன்றாகப் புத்தன் போற்றப்படுவதை மறக்கமுடியுமா? தசகுமாரச் சரிதம் பாடிய வைணவப் புலவன் புத்தனைத் திருமாலாகப் போற்றியது எற்றக்கு? 'கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்' எனப் பாராட்டப்படும் இராசசிம்ம பல்லவன் சீன வாணிபர் வழிபட நாகைப்பட்டினத்தில் புத்தவிகாரம் அமைத்துக் கொடுத்த அன்புச் செயலை எண்ணிப் பார்க்க வேண்டும். சிவபிரானை ஏத்தி இறைஞ்சி மங்கலப் பாடல் வரைந்து மிருச்ச கடிகம் எழுதிய சூத்திரிகன் நூல் முடிவில் பௌத்தத்தின் புகழ்பாடும் நுட்பம் என்ன? தேவாரத் திருமுறைகளைத் தொகுத்துத் திருநெறிய தமிழ் பரவ வகை செய்த சிவபாதசேகரனாகிய இராசராசசோழன் நாகையில் இராசராசப்பெரும் பள்ளி அமைததுப் பள்ளிச் சந்தங்கள் வழங்கிய வாய்மையை 'லெய்டன் பட்டயம்' விளம்பும் வரலாற்றுண்மையை மறக்க முடியுமா? கங்கைகொண்ட சோழேச்சுரம் அமைத்துச் செம்மேனி எம்மானைச் சேவித்த இராசேந்திரன்கூட நாகையில் இராசேந்திரப் பெரும்பள்ளி என்ற பௌத்தக் கோயில் எடுப்பித்துப் பள்ளிச் சந்தமாக அளித்த நிலபுலன்கள் ஏராளம் ஏராளம். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வேற்றுச்சமயம் இந்த நாட்டினை ஆட்சிபுரிந்தது என்றால் அதில் ஏதோ மாட்சி இருக்கிறது என்பதுதான் பொருள். ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆழமாக வேரூன்றி விட்ட சமயம் வீழ்ச்சி அடைகிறது என்றால் சமயத் தலைவர்கள் சமயம் சார்ந்தோர் இவர்களிடம் ஏதோ வீழ்ச்சி ஏற்பட்டது எனக் கொள்ளுதல் வேண்டும். அன்றி, அதனைவிட உயரிய சமயம் உதயமாகிவிட்டது என்று எண்ணுதல் வேண்டும் எந்த வைதிகர்கள் புத்தரைப் புறக்கணித்தார்களோ அதே வைதிகர்கள் புத்தரின் சீடர்களாக மாறிப் பௌத்தத்தை உலகெங்கும் பரப்பிய உத்தமத் தொண்டர்களாக விளங்கினார்கள். வேத வேதாந்தங்களைக் கற்றுத் துறைபோகிய நாகார்ச்சுனர், குமாரலப்தர், வசுபந்து, திக்நாகர் — இவர்கள் தாம் பௌந்தத்தின் புதுக் கிளைகளின் தலைமைத் தூண்களாகத் தோள்கொடுத்து நின்றவர்கள், வேதாந்த சூத்திரத்திற்கு விளக்கம் கொடுத்துக் கேவலாத்துவைதத்தை நிலைநாட்டிய ஆதிசங்கரரைப் பிரசன்ன பௌத்தர் என்றல்லவா இந்துக்கள் ஏளனம் செய்தனர். இவர்கள் எல்லாம் கண்மூடித் தனமாகவா பௌத்தத்தைக் கடைப் பிடித்தனர். சமயப்பொறை வேறு. சமயத்தில் ஊன்றி நிற்றல் வேறு ஞானசம்பந்தனே,

"போதியாரும் பிண்டியாரும் புகழலசொன்னலும்
நீதியாகக் கொண்டங்கருளும் நிமலன் இருநான்கின்
மாதிசித்தர் மாமறையின் மன்னிய தொன்னுலார்
சாதிகீத வர்த்தமானர் சண்பைநகராரே"

எனப் புத்தருக்கும் சமணருக்கும் அருள்பாலிக்கும் வித்தகச் சிவனாரின் கருணைத் திறனைக் கசிந்துரைத்தல் காணலாம். எனினும், சைவத்தின் மேற்சமயற் வேறில்லை ; அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் வேறில்லை என்பதைச் சாதித்துக்காட்டிச் சித்தாந்த சைவத்தை நிலைநாட்ட அவதாரம் எடுத்தவர் அவரே.

தமிழ் மக்கள் தலைவன் :

கற்றறிந்த பெருமக்கள் ஏற்றிப் போற்றும் அளவிற்குப் பௌத்த மதத்தில் எவ்வளவோ நல்ல அம்சங்கள் இருந்தன. ஆனால், பௌத்தத் துறவிகள் காலத்தின் கோலத்தால் சீலத்தையெல்லாம் காற்றிலே பறக்கவிட்டு, உண்டு. உடுத்து, உறங்கும் வேடதாரிகளாகவும் சீர்கேடர்களாகவும் மாறிவிட்ட காரணத்தினல் சம்பந்தனின் கடுங்கணைக்கு இலக்காகி. இரையாகி விட்டனர்.

தமிழர் தம் கடவுள் நெறியைக் காக்கவும், தமிழர் வாழ்வில் புத்துணர்ச்சி பூக்கவும், தமிழர்கள் சிவனருளையே நோக்கவும், புறச்சமயங்களை நீக்கவும் ஊக்கவும் உரமும் படைத்த ஒரு தலைவனைத் தவம் கிடந்து பெற்றது தமிழகம். உறங்கிக் கிடந்த தமிழகத்தின் ஊர்கள் தோறும் சென்று மக்களைத் தட்டியெழுப்பித் திரண்டெழச் செய்த பக்திப் பாசறைக்கும் தமிழ் இயக்கத்திற்கும் தொண்டர்படைக்கும் கிடைத்த தானைத் தலைவன்தான், தளபதிதான், தமிழ் ஞானசம்பந்தன். இவ்வுண்மையை,

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க"

"திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடம்கொள்ளும் நிலைபெருக"

"அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல் ஊழிதொறும்
தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்"

எனவரும் சேக்கிழார் வாசகம் உறுதிப்படுத்தும்.

— தொடரும்.

கலைமகள் விழா

திருவள்ளுவராண்டு 2003 புரட்டாசித்திங்கள் 30-ஆம் நாள் (16—10—'72) திங்கட்கிழமை கலைமகள் விழா சங்கப்பெரு மன்றத்தில் சிறப்புடன் கொண்டாடப்பெற்றது. சங்கத்தலைவர் விழாவுக்கு வந்தோரை வரவேற்றும், விழாத் தலைவரையும் சொற்பொழிவாளர்களையும் அறிமுகப்படுத்தியும் பேசினார்கள். மன்னர் சரபோசி அரசினர் கலைக்கல்லூரிப் பொருளியல் துறைப் பேராசிரியர் திரு. அர. சேசாசலம் எம். ஏ. அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றார். பண்ணாராய்ச்சி வித்தகர் திருமிகு ப. சுந்தரேசன் அவர்கள் "இசைக்கலை உள்ளுணர்வு" என்ற தலைப்பிலும், காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரி முதலவர் திருமிகு. புலவர். ந. இராமநாதன் பி. ஓ. எல். அவர்கள் தமிழிலக்கிய உலகில் பாவேந்தரின் புதுமைப்படைப் புகள் என்னும் தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

விழாத் தலைவர் பேசும்போது அண்மையில் வினோபாபாவே அவர்கள் இந்திய மொழிகள் எல்லாவற்றையும் தேவநாகரி எழுத்தால் எழுதவேண்டும் என்று பேசியிருப்பதை நினை வூட்டித் தமிழர்கள் விழிப்போடிருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திருமிகு. ப. சுந்தரேசன் அவர்கள் சீவகசிந்தா மணியில் சொல்லப்பட்டுள்ள இசைபற்றிய நுட்பங்களை எடுத்துக்கூறினர்

திருமிகு ந இராமநாதன் அவர்கள் பேசும்போது பாரதி தாசன் கவிதைகளில் சோலைகளே உமை நன்கு திருத்த இப்பாரினிலே முன்பு எத்தனை தோழர்கள் ரத்தம் சிந்தினரோ என்னும் கவிதையில் உழைப்பின் பெருமையைக் குறிப்பதற்கு, ரத்தம் சிந்தினரோ என்று கூறியுள்ள தொடர் பொருளாழம் படைத்தது என்று கூறினர். இதுபோன்றே பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் பலவற்றையும் அவர் எடுத்துக் காட்டி விளக்கியமுறை சுவையாக இருந்தது.

சொற்பொழிவுகள் முடிந்ததும் குழந்தைகள் இல்லச்சிறுவர் சிறுமியராலும் இராதாகிருட்டின இளநிலைப்பள்ளிச் சிறுமிய ராலும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன. உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவரால் "செக்கிழுத்த செம்மல்" என்னும் இசைக்கதை நிகழ்ச்சி நடத்தப்பெற்றது. சங்கப் பொருளாளர் நன்றி கூறியதும் சங்கவாழ்த்தும் நாட்டுவாழ்த் தும் பாடப்பெற்றுக் கூட்டம் இனிது முடிவுற்றது.